IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No. 239/2024

dated : 03.02.2026

D.W.1

Name மகேந்திரராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

05.01.2018 ம் தேதியன்று திருமலை முத்து மகேந்திரனுக்கு எழுதிவைத்த நன்கொடை ஆவணம் **பி.சா.ஆ.6** ஆகும். 05.01.2018 ம் தேதியன்று திருமலை முத்து மகேந்திரனுக்கு எழுதிவைத்த நன்கொடை ஆவணம் **பி.சா.ஆ.7** ஆகும். மாடசாமி இறப்பு சான்று **பி.சா.ஆ.8** ஆகும்.

**<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

என் அப்பா பெயர் திருமலைமுத்து அவரது தந்தை பெயர் மாடசாமி ஆகும். மாடசாமிக்கு திருமலைமுத்து, ஆறுமுகம், ஆகியோர் ஆண்மக்கள், இரண்டு பெண் மக்களும் உண்டு. மாடசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் பூர்விக சொத்துக்கள் என்றால் சரியல்ல. அவர் மாடசாமி நாடார் இறக்கும்போது அவருக்கு சொத்துக்கள் இல்லை. 1வது பட்டியல் 1, 2 இலக்கச் சொத்துக்கள் வீடு என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் உள்ள வீடு என் தாத்தா பிறந்த வீடு என்றால் சரிதான். அதை என் தாத்தா வாரிசு என்ற முறையில் அனுபவித்து வந்தார். என் தாத்தா பெயருக்கு அந்த சொத்திற்கு நத்தம் நிலவரித்திட்டத்தில் பட்டா வழங்கப்பட்டது. பி.வா.சா.ஆ.7

ஆவணத்தில் வாரிசுமுறையில் என் தாத்தா மாடசாமிக்கு கிடைத்த சொத்தை என் அப்பாவுக்கு வாரிசு முறையில் கிடைத்து அதை என் அப்பா நன்கொடை கொடுத்ததாக நான் கூறுகிறேன். மேற்படி பி.சா.ஆ.6, 7 ஆவணங்கள் எழுதப்பட்ட தேதி 05.01.2018 ஆகும். அவற்றை எழுதும்போது நானும் உடனிருந்தேன். அதற்கான முத்திரைத்தாள் என் பெயரில்தான் நான் பணம் கொடுத்து வாங்கப்பட்டது. அதற்கான பதிவு செலவு நான்தான் செலுத்தினேன். சாட்சிகள் இருவரும் எனது நண்பர்கள் என்றால் சரிதான். 319/1 மற்றும் 2 சொத்துக்களில் என் அப்பா என் தாத்தா மாடசாமிக்கு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த பத்திர நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான் அது வா.சா.ஆ.12 ஆகும். என் அப்பா மா. திருமலைமுத்து என்று கையொப்பமிடுவார். என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் அனைத்து ஆவணங்களிலும் கையொப்பம் செய்யும் நிலையிலேயே இருந்தார். என் அப்பாவுக்கு இடது கால் இடது கையில் வாத நோய் ஏற்பட்டிருந்தது. 2017 க்கு பின்னர் நடமாட்டமின்றி இருந்து வந்தார் என்றால் சரியல்ல. திருநெல்வேலி வெங்கடேஷ்வரா மருத்துவமனையில் 2017 ல் என் அப்பாவை சேர்த்தோம் என்றால் சரியல்ல. 2002 ம் ஆண்டில் சேர்த்தோம். பி.சா.ஆ.6 மற்றும் 7 க்கு ஆவண உள்ளடக்க விவரங்களை நான்தான் கூறினேன். என் அப்பாவையும் நான்தான் அழைத்துச் சென்றேன். அங்கு எழுதப்பட்டிருந்த ஆவணத்தில் என் அப்பா ரேகை வைத்தார் என்றால் சரிதான். என் அப்பா குழந்தைகள் அனைவரின் மீதும் மனைவி மீதும் பாசம் உள்ளவர் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி என் சகோதரர்

அவர் கணவரை பிரிந்து வாழ்ந்து வருகிறார். அவருக்கும் சொத்து கொடுக்கும் எண்ணத்துடன் என் தந்தை இருந்து வந்தார் என்றால் சரியல்ல. முத்துசாமி , ராசையா, முருகன் ஆகியோர்கள் பி.சா.ஆ.6, 7 எழுதிய காலத்தில் என் தந்தையுடன் பேசியதில்லை என்றால் சரியல்ல. மதியம் 3 மணிக்கு மேல் மேற்படி ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டது. எங்கள் ஊரில் எனது பங்காளிகள் உள்ளார்கள். பி.சா.ஆ.6, 7 எழுதப்பட்டவிவரம் உறவினர்களுக்கு தெரியக்கூடாது என்பதற்காக என் நண்பர்களை அழைத்துச் சென்றேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.6, 7ல் உள்ள சாட்சிகளை விசாரிக்கலாம். திருமலைமுத்துவிற்கு விவசாயம் தவிர வேறு வேலை இல்லையென்றால் சரியல்ல. விவசாய பொருட்களை கொள்முதல் செய்து வியாபாரம் செய்து வந்தார் அதற்கான ஆவணங்கள் என்வசம் இல்லை. 1வது தபசில் 1, 2 இலக்கச் சொத்துக்களில் உள்ள வீடு 80 ஆண்டுகள் பழமையான வீடு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தந்தை இறக்கும்வரை அவர் பெயரில்தான் பட்டாவும் தீர்வையும் செலுத்தப்பட்டது. என் தந்தை இறக்கும்வரை பி.சா.ஆ.6, 7 நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. உடனேயே நடைமுறைக்கு வந்துவிட்டது. 1வது இலக்கச் சொத்தில் என் தாயாரும், 3ம் பிரதிவாதியும் குடியிருந்து வருகிறார்கள். என் தாயாருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டபோது வாதிதான் அவரை மருத்துவமனையில் கவனித்துக் கொண்டார் என்றால் சரிதான் அப்போது நான் ஊரில் இல்லை. பி.சா.ஆ.6, 7 ஆவணம் என்

தந்தையின் சுய விருப்பத்தில் எழுதிக் கொடுத்ததல்ல என்றும் அது ஒருபோதும் நடைமுறைக்கு வரவில்லை என்றும் அது மோசடியானது என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.03 18:14:33 +0530